March 2019

Reg. No. .......................................

Name ..........................................

**FY 12**

**Part - II**

**TAMIL**

Maximum : 80 Scores

Time : **2½** Hours

Cool off time : **15** Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
- Read the instructions carefully.
- Read the questions carefully before answering.
- Calculations, figures and graphs should be shown in the answer sheet itself.
- Give equations wherever necessary.
- Electronic devices except nonprogrammable calculators are not allowed in the Examination Hall.

**பொதுவான விதிமுறைகள் :**

- வினாத்தாள் எழுதுவதற்கான நேரத்தைத்தவிர 15 நிமிடங்கள் அதிகமாக தரப்பட்டுள்ளது.
- அந்த 15 நிமிடங்களில் வினாக்களை புரிந்து கொண்டு, விடைகளை எழுதுவதற்கு திட்டமிடுவதற்காக உபயோகிக்கவும்.
- விடை எழுவதற்கு முன்னால் வினாக்களை கவனமாக படிக்கவும்.
- விடையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்ட வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்கவும்.
- வரைபடங்கள், படங்கள் மற்றும் கணக்கீடுகள் யாவும் விடைத்தாளிலேயே காண்பிக்கப்பட வேண்டும்.
- தேவையான இடங்களில் சமன்பாடுகள் கொடுக்கவும்.
- நிரல் படுத்தப்படாத கால்குலேட்டர்கள் தவிர மற்ற எந்த மின்னணு சாதனங்களும் தேர்வு எழுதும் ஹாலுக்குள் அனுமதிக்கப் படமாட்டாது.

**1, 2 வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் ஒன்று வீதம்.** **2 × 1 = 2**

1. கலித் தொகைத் குறிப்பிடும் புணர்ந்தாரைப் பிரியாமை என்பது

(அ) ஆற்றுதல் (ஆ) தேற்றுதல்

(இ) போற்றுதல் (ஈ) தூற்றுதல்

2. "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை

இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

- இப்பாடலில் அகழ்வாரைத் தாங்கும் நிலம் எதனோடு உவமிக்கப்பட்டுள்ளது.

*(அ)* தம்மை போற்றுபவரை (ஆ) தம்மை புகழ்பவரை

(இ) தம்மை பழிப்பவரை (ஈ) நம்மிடம் அன்பு கூறுபவரை

**3 முதல் 6 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. மதிப்பெண் மூன்று வீதம்.** **4 × 3 = 12**

3. "ஒயிலாட்டம்" என்னும் தமிழகக் கலையினைக் குறித்து சிறுகுறிப்பு எழுதுக.

4. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள பாடலை நயம் பாராட்டுக.

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

5. காது, பஞ்சு இவை முறையே நெடில் தொடர் குற்றியலுகரம், மென் தொடர் குற்றியலுகரம் ஆகும் - விளக்குக.

6. உங்கள் பள்ளியில் இருந்து ஒரு நாள் சுற்றுலா செல்லத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான திட்டம் தயாரிக்க.

**7 முதல் 11 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கிற்க்கு விடை எழுதுக. மதிப்பெண் நான்கு வீதம். $4 \times 4 = 16$**

7. பின்வரும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பத்திரிகைக்கான விளம்பரம் தயார் செய்க.

<u>வனப் பாதுகாப்பு கருத்தரங்கம்</u>

நாள் - **21 - 3 - 2019**

இடம் - பள்ளி வளாகம்

<u>நிகழ்ச்சி நிரல்</u>

| | | |
|---|---|---|
| இறை வணக்கம் | - | பள்ளி மாணவிகள் |
| வரவேற்புரை | - | பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் |
| கருத்தரங்கம் | | |
| துவங்கி வைப்பவர் | - | வனத்துறை அமைச்சர் |
| தலைமை தாங்குபவர் | - | பள்ளி முதல்வர் |
| கட்டுரை வாசிப்பவர் | - | மாணவர்கள் |
| நன்றியுரை | - | மாணவர் தலைவர் |

8. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன கால வகையினானே

- நன்னூல்

- இக் கூற்றோடு உடன் படுகிறாயா? ஏன்? விளக்குக.

9. உலக நீர் தினத்தையொட்டி உங்கள் பள்ளியில் "நதிகள் மாசடைவதின் காரணம் ஆலைக்கழிவுகளே / மக்கள் தொகை பெருக்கமே" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற உள்ளது. இதில் ஏதாவது ஒரு அணியில் பேசுவதற்கான குறிப்புக்கள் தயார் செய்க.

**10.** கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையினைப் படித்து விமர்சனக் குறிப்பு தயார் செய்க.

தானும் உணவாகி
மீனும் உணவாகும்
இந்த நதிக்கு நானும் உணவாவேன்
இது
நான் தவழ்ந்த கோரைப்பாய்
முகம் பார்த்த கண்ணாடி
என் காதலின் வீணை
ஏகாந்தங்களின் பள்ளியறை
பெருமூச்சுகளின் பந்தய மைதானம் - சிற்பி

**11.** உலக மகளிர் தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் வெளியிட இருக்கும் "மகளிர் மலரில்" வெளியிட "பெண்ணியம்" என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயாரிக்க.

**குறிப்பு:**

- சமூகம்
- குடும்பம்
- வேலைத்தளம்

**12, 13 வினாக்களுக்கு விடை எழுதுக. மதிப்பெண் ஐந்து வீதம். 2 × 5 = 10**

**12.** கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதைகளைப் படித்து ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுக.

"சிதறினாலும் சிதறல்களும்
கோள்களாகி
வீழ்ந்து மீண்டும்
பிய்ந்த சதைகள் ஒட்டி
தழும்பு மறைத்துத் திரியும்
வாழும் கல்பனாக்களுக்கு
தேவையில்லை
அங்கீகாரம் தரத் தயாரில்லாத
உங்கள் அஞ்சலிகள்" - திலக பாமா

அவளின் கதவுகளில்லா
வீடுகளையும் பற்றிய
கனவின் மடிப்புக்களோடு
அஞ்சல் செய்யப்படாமலே
மட்கிப் போயிருக்கின்றன
அந்தக் கதவிடுக்குகளில் - தமிழச்சி

**13.** அழிந்துவரும் நாட்டுப்புற கலைகளை அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு உங்கள் பள்ளி கலைமன்றம் சார்பில் கலை பண்பாட்டுத் துறைக்குக் கடிதம் எழுதுக.

**14 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கிற்க்கு விடை எழுதுக. மதிப்பெண் ஆறு வீதம். 4 × 6 = 24**

**14.** சமூகத்தில் பெண்களுக்கு சம உரிமை தேவை என்ற கருத்தின் அடிப்படையில் "சமத்துவ சமுதாயம்" என்னும் தலைப்பில் பத்திரிக்கைக்குத் தலையங்கம் எழுதுக.

**15.** இலக்கியத்தில் பாடுப்பொருள் என்னும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக. பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தவும்.

**குறிப்புக்கள்:**

- வீரம்
- அவலம்
- காதல்
- பக்தி
- இன்பம்
- நகைச்சுவை

**16.** கேரளக்கலைப் பண்பாட்டுத்துறை "கலைகளின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடத்த தீர்மானித்துள்ளது. இதில் உரையாற்ற சொற்பொழிவு உரை தயார் செய்க.

**17.** தமிழ்த் தொண்டு புரிந்த யாழ்ப்பாண அறிஞர்கள் பலருள் குறிப்பிடத்தக்கவர் சி.வை. தாமோதரம் பிள்ளை அன்னாரின் தமிழ்ப்பணி குறித்து வானொலி உரை தயார் செய்க.

**18.** கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களைப் பயன்படுத்தி செய்தித்தொகுப்பு தயார் செய்க.

| | | |
|---|---|---|
| பெயர் | - | ஆ. மாதவன் |
| பிறந்த இடம் | - | திருவனந்தபுரம் |
| பிறந்த ஆண்டு | - | 1934 |
| தெரிந்த மொழிகள் | - | தமிழ், மலையாளம், ஆங்கிலம் |
| சிறுகதை தொகுப்புக்கள் | - | மோக பல்லவி, ஆனைச்சந்தம்,<br>மாதவன் கதைகள், அரேபியக்குதிரை,<br>கடைத்தெரு கதைகள் |
| நாவல்கள் | - | கிருஷ்ணப்பருந்து, புனலும், மணலும், தூவானம் |
| விருதுகள் | - | 2016 - சாகித்திய அகாதமி<br>2010 - விஷ்ணுபுரம்<br>2007 - கலைமாமணி |

**19 முதல் 21 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு விடை எழுதுக. மதிப்பெண் எட்டு வீதம்.** **2 × 8 = 16**

**19.** கேரள நாட்டுப் புறவியல் துறை "கேரள நிகழ்த்துக்கலைகள்" என்ற பொருளில் கருத்தரங்கம் நடத்த தீர்மானித்துள்ளது. இதில் பங்கேற்க "படையணி நிகழ்த்துக்கலையின் சிறப்புகள்" என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்க.

**20.** உலக நாடக தினத்தை முன்னிட்டு கேரள நாடக அகாதமி ஒரு சிறப்பு மலர் வெளியிடயிருக்கிறது. இதில் வெளியிட "பம்மல் சம்பந்த முதலியாரின் வைகுண்ட வைத்தியர்" என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்க.

**21.** "மூன்றாம் உலகப்போர்" என்ற நாவல் பகுதியின் அடிப்படையில் "கடல் மாசுக்களும் உயிரினச் சிதைவும்" என்ற தலைப்பில் திறனாய்வுக் கட்டுரை எழுதுக. பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தவும்.

**குறிப்புக்கள்:**

- உயிரினச் சிதைவு
- கடலில் எண்ணெய்க் கசிவு
- புகை மூட்டம்